பெற்றால்தான் பிள்ளையா

பெற்ருல்தான் பிள்ளேயா

நடிகர்கள்

எம். ஜி. ஆர். | **பி. சரோஜாதேவி**

எம். ஆர். ராதா
எம். என். நம்பியார்
எஸ். ஏ. அசோகன்
கே. ஏ. தங்கவேலு

சௌகார்ஜானகி
இந்திராதேவி
மோகஞ
பேபி ஷகீலா

மற்றும் பலர்.

திரைக்கதை வசனம்
ஆரூர்தாஸ்

இசை
M. S. விஸ்வநாதன்

டைரக்ஷன்

கிருஷ்ணன்-பஞ்சு

பெற்ருல்தான் பிள்ளேயா—பாடல்கள்

இயற்றியவர் வாலி — பாட்டு 1 — பாடியவர் டி. எம். சௌந்தரராஜன்

நல்லநல்லபிள்ளேகளேநம்பி இந்த-நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறுகைகளேநம்பிஒருசரித்திரம் இருக்குது தம்பி
தவறு என்பது தவறிச் செய்வது
தப்பு என்பது தெரிந்து செய்வது
தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணும்
தப்பு செய்தவன் வருந்தியாகணும்
அன்னேயிடம் நீ அன்பை வாங்கலாம்
தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்
இரண்டுமிருந்தால்தான் பேரை வாங்கலாம்
பேரை வாங்கிஞல் ஊரை வாங்கலாம்
கருணே இருந்தால் வள்ளலாகலாம்
கடமை இருந்தால் வீரனுகலாம்
பொறுமையிருந்தால் மனிதனுகலாம்—இந்த
மூன்றுமிருந்தால் தலேவனுகலாம்
அறிவுக்கு இணங்கு வள்ளுவரைப் போல்
அன்புக்கு வணங்கு வள்ளலாரைப் போல்
கவிதைகள் வழங்கு பாரதியைப் போல்
மேடையில் முழங்கு அறிஞர் அண்ணுபோல் [நல்ல

இயற்றியவர் வாலி — பாட்டு 2 — பாடியவர்கள் டி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா

பெ: கண்ணன்பிறந்தான்எங்கள்கண்ணன்பிறந்தான்புதுக்

கவிதைகள் பிறந்ததம்மா மன்னன்பிறந்தான்—எங்கள்
மன்னன் பிறந்தான்—மனக் கவலைகள் மறந்ததம்மா
ஆ: பிள்ளை மொழியோ—அது கிள்ளை மொழியோ
வெள்ளை மனமோ—அன்பைக் கொள்ளை இடுமோ.. ஓ
பெ: முத்துச்சிரிப்போ—அது முல்லைவிரிப்போ—சித்தம்
கத்தும் குயிலோ—அது கண்ணன் குரலோ
என்னை மறந்தேன்—நான் உன்னைமறந்தேன்—இன்று
தன்னை இழந்தேன்—சுகம் தன்னில் விழுந்தேன் (கண
ஆ: கன்னங் கறுப்போ—சுடும் கண்கள் நெருப்போ
என்ன நினைப்போ—அது இன்பத் தவிப்போ
பெ: தொட்டகுறையோ—முன்பு விட்ட குறையோ—அது
எண்ணத் துடிப்போ—இல்லை என்ன நடிப்போ
ஆ: கண்ணை அளந்தேன் அதில்பொன்னை அளந்தேன் பிள்ளை
நெஞ்சை அளந்தேன்—அதில பூவை அளந்தேன் (கண
பெ: கண்ணில்எடுத்தேன்—நெஞ்சைக்கையில்கொடுத்தேன்
சொல்லத்துடித்தேன்—அதைச் சொல்லி முடித்தேன்
ஆ: ராதைநினைப்பாள்—அங்குகண்ணன் இருப்பான் அந்தக்
கோதை சிரிப்பாள்...அதைக் கண்டு ரசிப்பான்
இரு: ஒன்றைநினைத்தேன்—அந்த
ஒன்றையடைந்தேன்—உண்மை அன்பைத்தருவேன்—அந்த
அன்பைப் பெறுவேன் (கண்ணன்)

இயற்றியவர்: பாட்டு 3 பாடியவர்
வாலி டி. எம். சௌந்தரராஜன்

செல்லக்கிளியே மெல்லப்பேசு
தென்றல் காற்றே மெல்ல வீசு
தூங்கும் மன்னவன் தூங்கட்டுமே
தொடரும் கனவுகள் தொடரட்டுமே (செல்ல
திங்கள் முகமெடுத்து செவ்வாய் இதழெடுத்து
வெள்ளை மலர்ச் சிரிப்பில் பிள்ளை வருவான்
தத்தும் நடைநடக்க தண்டை குரல் கொடுக்க
சித்தம் குளிரவைக்க முத்தம் தருவான் (செல்லக்

இயற்றியவர்: பாட்டு 4 பாடியவர்கள்
வாலி சீர்காழி கோவிந்தராஜன்
பி. சுசீலா, குழந்தைகள்

பெ: நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி—இந்த
நாடே இருக்குது தம்பி
இரு: சின்னஞ் சிறு கைகளை நம்பி—ஒரு
சரித்திரம் இருக்குது தம்பி
ஆ: கருணை இருந்தால் வள்ளலாகலாம்
கடமை இருந்தால் வீரனாகலாம்
பொறுமை இருந்தால மனிதனாகலாம்

மூன்றுமிருந்தால் தலைவனாகலாம் (சின்னஞ்

பெ: அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம்
தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம்
இரண்டுமிருந்தால் பேரை வாங்கலாம்
பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்

ஆ: அன்பில் உயர்ந்தவர் யாரு
பை: வள்ளலார்
ஆ: ஆமாம்! வள்ளலார்
பெ: அறிவில் உயர்ந்தவர் யாரு?
பை: வள்ளுவர்
பெ: ஆமா! வள்ளுவர்
ஆ: பாட்டில் உயர்ந்தவர் யாரு?
பை: பாரதியார்
ஆ: ஆமா! பாரதியார்
பெ: பேச்சில் உயர்ந்தவர் யாரு?
பை: அண்ணா (நல்ல

பெ: கோவிலைத் தேடி தெய்வம் வந்ததோ
கூட்டிக்குள் பறவை திரும்பி வந்ததோ?
தாய் முகம் பார்க்க பிள்ளை வந்ததோ
தங்கத் தாமரை அரும்பி வந்ததோ
மழலையைக் கேட்டேன் மனம் குளிர்ந்தது
மடியில் சுமந்தேன் நினைவு வந்தது
ஊமையின் உள்ளம் வாய் மலர்ந்தது
மகனே என்றொரு குரல் கொடுத்தது (நல்ல

இயற்றியவர்: வாலி

பாட்டு 5

பாடியவர்கள்: சௌந்தரராஜன், பி. சுசீலா

ஆ: சக்கரைக் கட்டி ராஜாத்தி—என்
மனசை வைச்சிக்கோ காப்பாத்தி
சந்தனக் கட்டி மேனியிலே—நான்
சாஞ்சிக்கவா சொல்லு மகராசி

பெ: பட்டுப் போன்ற உடல் தளிரோ—என்னைப்
பார்க்கையில் வந்த குளிரோ
தோகை மயிலின் தோளை அணைத்து
பள்ளி கொள்வது சுகமோ

ஆ: தொட்டுக்கொள்ள விரல் துடிக்கும் விழி
தூரப் போகச் சொல்லி நடிக்கும்
ஆளை மயக்கும் பாலைச் சிரிப்பில்
ஆசை பிறந்தது எனக்கும்

இரு: கொடுத்த மனசுக்கும் எடுத்த மனசுக்கும்
ஆ: கேள்வி என்ன?
பெ: ஜாடை என்ன?
ஆ: தேவை இல்லை வெட்கம்

பெ: அத்தை மகனே அத்தானே—உன்
அழகைக் கண்டு நான் பித்தானேன்
தென்றலடிக்கும் தோட்டத்திலே—நான்
பூத்திருக்கும் முல்லைக் கொத்தானேன்
ஆ: உறவைச் சொல்லி நான் வரவோ—என்
உதட்டில் உள்ளதைத் தரவோ
மாலை மயக்கம் தீரும் வரைக்கும்
வாரிக் கொடுப்பேன் வா வா
பெ: மடியைத் தேடி வந்து விழவோ—இந்த
மாப்பிள்ளை அழகுக்கு அழகோ
காலைவரையில்சேலைநிழலில் கண்கள் உறங்கிட வா வா
இரு:கொடுத்த மனசுக்கும் எடுத்த மனசுக்கும்
ஆ: கேள்வி என்ன?
பெ: ஜாடை என்ன?
ஆ: தேவை இல்லை வெட்கம்

இயற்றியவர் பாட்டு 6 பாடியவர்
வாலி பி. சுசீலா

பெ: செல்லக்கிளியே மெல்லப் பேசு
தென்றல் காற்றே மெல்ல வீசு
தூங்கும் மன்னவன் தூங்கட்டுமே
தொடரும் கனவுகள் தொடரட்டுமே
நெஞ்சில் குடியிருக்க நித்தம் கொலுவிருக்க
கொஞ்சும் குமரிப்பெண்ணின் வாசல் வருவான்
கண்ணில் கொடி வளர்ந்து காதல் மலர் பறித்து
பெண்ணின் குழல் முடிக்க வள்ளல் வருவான் (செல்
ஊரார் பலரிருந்தும் உற்றார் சிலரிருந்தும்
வேறோர் இடத்தில் என்னைத் தரவில்லையே
உன்னை நினைவில் வைத்து நினைவை மனதில் வைத்து
மனதைக் கொடுத்தும் சுகம் பெறவில்லையே செல்ல

இயற்றியவர் பாட்டு 7 பாடியவர்
வாலி டி. எம். சௌந்தரராஜன்

ஆ: யாரோ தவமிருந்து யாரோ மடி சுமந்து
வேறோர் மனை விளங்க ஏன் பிறந்தாய்
பூப்போல் சிரித்திருந்து பொன்போல் வளர்ந்திருந்து
ஏழை மனம் துடிக்க ஏன் பிரிந்தாய்
செல்லக்கிளியே மெல்லப்பேசு தென்றல்காற்றேமெல்லவீசு
தோளில் தவழ்ந்திருக்க தொட்டில் நிறைந்திருக்க
பிள்ளைத் துணை வேண்டிக் கிடந்தேன்
ஏதோ உறவு வரும் என்றும் உதவி வரும்
என்றே எனது வழி நடந்தேனே......

குமரன் பிரிண்டர்ஸ், மதுரை—1

பெ: அத்தை மகனே அத்தானே—உன்
அழகைக் கண்டு நான் பித்தானேன்
தென்றலடிக்கும் தோட்டத்திலே—நான்
பூத்திருக்கும் முல்லைக் கொத்தானேன்
ஆ: உறவைச் சொல்லி நான் வரவோ—என்
உதட்டில் உள்ளதைத் தரவோ
மாலை மயக்கம் தீரும் வரைக்கும்
வாரிக் கொடுப்பேன் வா வா
பெ: மடியைத் தேடி வந்து விழவோ—இந்த
மாப்பிள்ளை அழகுக்கு அழகோ
காலைவரையில்சேலைநிழலில் கண்கள் உறங்கிட வா வா
இரு: கொடுத்த மனசுக்கும் எடுத்த மனசுக்கும்
ஆ: கேள்வி என்ன?
பெ: ஜாடை என்ன?
ஆ: தேவை இல்லை வெட்கம்

இயற்றியவர் பாட்டு 6 பாடியவர்
வாலி பி. சுசீலா

பெ: செல்லக்கிளியே மெல்லப் பேசு
தென்றல் காற்றே மெல்ல வீசு
தூங்கும் மன்னவன் தூங்கட்டுமே
தொடரும் கனவுகள் தொடரட்டுமே
நெஞ்சில் குடியிருக்க நித்தம் கொலுவிருக்க
கொஞ்சும் குமரிப்பெண்ணின் வாசல் வருவான்
கண்ணில் கொடி வளர்ந்து காதல் மலர் பறித்து
பெண்ணின் குழல் முடிக்க வள்ளல் வருவான் (செல்
ஊரார் பலரிருந்தும் உற்றார் சிலரிருந்தும்
வேறோர் இடத்தில் என்னைத் தரவில்லையே
உன்னை நினைவில் வைத்து நினைவை மனதில் வைத்து
மனதைக் கொடுத்தும் சுகம் பெறவில்லையே செல்ல

இயற்றியவர் பாட்டு 7 பாடியவர்
வாலி டி. எம். சௌந்தரராஜன்

ஆ: யாரோ தவமிருந்து யாரோ மடி சுமந்து
வேறோர் மனை விளங்க ஏன் பிறந்தாய்
பூப்போல் சிரித்திருந்து பொன்போல் வளர்ந்திருந்து
ஏழை மனம் துடிக்க ஏன் பிரிந்தாய்
செல்லக்கிளியே மெல்லப்பேசு தென்றல்காற்றேமெல்லவீசு
தோளில் தவழ்ந்திருக்க தொட்டில் நிறைந்திருக்க
பிள்ளைத் துணை வேண்டிக் கிடந்தே
ஏதோ உறவு வரும் என்றும் உதவி வரும்
என்றே எனது வழி நடந்தேனே......

குமரன் பிரிண்டர்ஸ், மதுரை—1

விற்பனையாகிறது

தமிழக வரலாற்றில் புதிய வரலாறு
படைத்துவரும் புரட்சித்தலைவர்
M.G.R. வீரவரலாறு........

சிவாஜியின் விமர்சனங்களும்
150 பாடல்களும்..............

மதுகுடிப்பதினால் ஏற்படும் தீமைகள்

சினிமாவில் "பக்திப்பாடல்கள்"

டி.எம்.சௌந்தரராஜன், சீர்காழி
கோவிந்தராஜன் பாடிய பக்திப்பாடல்கள்

சூலமங்கலம் சகோதரிகள் மற்றும்
பலர் பாடிய "பக்திப்பாடல்கள்"

இசைமுரசு நாகூர் அனிபா பாடிய
இஸ்லாமியப் பாடல்கள்

சினிமாவில் "தத்துவப்பாடல்கள்"
(1 முதல் 6 வரிசை)

மலிவுவிலை சினிமா பாடல்கள்
"மக்கள்திலகம்" 1 முதல் 6 வரை.
"நடிகர்திலகம்" 1 முதல் 8 வரை.

குமரன் கம்பெனி

223, மேலமாசிவீதி, மதுரை-1.